# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2049/59 - 2017 දෙසැම්බර් මස 15 වැනි සිකුරාදා - 2017.12.15

*2049/59 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக் கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்**
**3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளை**

திருத்தப்படவாறன 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு அபிவிருத்தி மூலோபாய மற்றும் சர்வதேச வியாபார அமைச்சர் மலிக் சமரவிக்ரம ஆகிய நான், முதலீட்டு ஊக்குவிப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சராகவிருப்பதனால், 2016, யூலை 04 ஆந் திகதிய 1974/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் 03 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அடுத்துப்பின்னரான கட்டளையினால் திருத்தப்பட்டவாறாக, 2012, திசெம்பர் 19 ஆந்திகதிய 1789/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் 03 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட கட்டளைக்கு மேலதிகமாக இக் கட்டளையின் மூலம் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன் :-

கருத்திட்டத்தை அமுலாக்குவதற்கு வழங்கப்பட்ட காலத்தை நீடிப்பதற்கென, 2016, யூலை 04 ஆந் திகதிய 1974/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அடுத்துப் பின்னரான கட்டளையினால் திருத்தப்பட்டவாறாக, 2012, திசெம்பர் 19 ஆந் திகதிய 1789/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளையின் (4) ஆம் வாசகம் பின்வருமாறு வாசிக்கப்படும்வகையில் இத்தால் திருத்தப்படுகின்றது :-

" (4) மேற்கூறப்பட்ட "மேல் மாகாணத்தில் கொழும்பு 3, காலி வீதி, 116 ஆம் இலக்கத்தில் 90 சேவையளிக்கப்பட்ட இருப்பிடக்கூறுகளுடன் 475 அறைகளைக் கொண்ட நகர ஹோட்டலொன்றை நிர்மாணித்து தொழிற்படுத்துவதற்கான கருத்திட்டம் " 2012, யூலை 19 ஆந் திகதியன்று, இலங்கை முதலீட்டுச் சபையுடன் கையொப்பமிடப்பட்டு 2018, திசெம்பர் 31 ஆந் திகதியன்று முடிவடைகின்ற கருத்திட்ட உடன்படிக்கைத் திகதியிலிருந்து எழுபத்தேழு (77) மாத காலப்பகுதியினுள் வர்த்தகத் தொழிற்பாடுகளைத் தொடங்குதல் வேண்டும்.

மலிக் சமரவிக்ரம,
அபிவிருத்தி மூலோபாய மற்றும் சர்வதேச வியாபார அமைச்சர்.

2017, திசெம்பர் மாதம் 14.

12 - 1075